ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள

# ஶ்ரீரங்கவிமாந ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்

## (மூலமும், உரையும்)



(இக்ஷ்வாகு குலதனம்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஶ்ரீ அஹோபில தாஸன் க. ஶ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

ஸநத்குமாரர் உரைப்பது:

ததா ஸ்ரீரங்கமாஹாத்ம்யம் ப்ரபாவோ ரங்கசாயிந:
விஷ்ணுப்ரியாஸ்ததா தர்மா: க்ஷேத்ரவாஸஸ்ய வைபவம்
ஸர்வம் ஸம்யக் த்வயாக்யாதம் த்ருப்திரத்ய ந மே பவத்
அத: ப்ரஸீத தேவேச தாஸேமயி க்ருபாநிதே
யேந ஸம்பத் ப்ரவ்ருதிச்ச தீர்க்கமாயுர்ஹரே: க்ருபா
நிச்ரேயஸம் ச ஜாயதே தாத்ருக்தர்மம் வத ப்ரபோ

**பொருள்** – ஸநத்குமாரர் நான்முகனிடம், "நான்முகனே! ஸ்ரீரங்கநாதனுடைய பிரபாவம், அவனுக்கு விருப்பமான தர்மங்கள், ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் வசிப்பதால் உண்டாகும் மேன்மை போன்ற பலவும் உம்மால் விரிவாக உரைக்கப்பட்டன. ஆனாலும் எனக்கு மனநிறைவு உண்டாகவில்லை. பிரபுவே! உயர்ந்த செல்வம், செய்கைகள், தீர்க்கமான ஆயுள், ஸ்ரீரங்கநாதனுடைய கருணை, மோக்ஷம் ஆகியவை அனைத்தும் கிடைக்க வைக்க வல்லதொரு தர்மத்தை நீ உரைக்கவேண்டும்", என்றார்.

ப்ரஹ்மா உரைப்பது:

ஸாது ப்ருஷ்டம் த்வயாபூத்ர லோகாநுக்ரஹ காங்க்ஷயா
ஹரிப்ரீதிகரம் சாஸ்த்ரம் தர்மோபவதி நாந்யதா
அதஸ்த்வம் ஸாவதாநேந ச்ருணுஷ்வேதம் ஸநாதநம்
தர்மம் தர்மவிதாமாந்ய முக்தே: ப்ரதம ஸாதநம்
ரஹஸ்யம் தர்மமப்யேததாக்யாதம் பூர்வாத்மஜ
இதாநீமாதராதிக்யம் தவ ஜ்ஞாத்வா வதாமி தத்
உக்தம் ஹி ஸஹ்யஜாமத்யே சந்த்ரபுஷ்கரணீ தடே
ஸர்வலோகாஸ்பதபாதி ரஹஸ்ஸத்மேதி விஸ்தராத்
தாத்ருசம் ரங்கஸதநம் ஸுராஸுர ஸமாவ்ருதம்
ப்ரதக்ஷிணீ க்ருத்ய நர: பராம்கதிம் அவாப்நுயாத்
அஜ்நிஷ்டோம ஸஹஸ்ராணாம் வாஜபேயாயுதஸ்ய ச
யத்பலம் தத் அவாப்நோதி ரங்கஸத்ம ப்ரதக்ஷிணாத்
யஸ்ய ஸ்ரீரங்கஸதநே ஸர்வதேவே கணாச்ரயே
ப்ரதக்ஷிணேமதிர்ஜதா ப்ரஸந்நாஸ்தஸ்ய தேவதா:

**பொருள்** – நான்முகன் ஸநத்குமாரரிடம், “உன்னுடைய இந்தக் கேள்விகள் உலகத்திற்கு அனுக்ரஹம் செய்வதற்காகவே கேட்கப்பட்டது. சாஸ்த்ரங்களின் அடிப்படையில் உள்ள தர்மங்களின் வழி நடப்பது என்பது ஸ்ரீஹரிக்கு மிகவும் மகிழ்வை அளிப்பதாகும். நான் கூற உள்ளதை மிகவும் கவனமாகக் கேட்பாயாக. இதனைக் கேட்பதில் உனக்கு உள்ள ஈடுபாட்டை அறிந்த காரணத்தால், மோக்ஷத்துக்கு முதன்மையான உபாயமாக உள்ள இந்த இரகசியமான தர்மத்தை உனக்கு நான் உரைக்கிறேன். காவேரியின் நடுவில் உள்ள சந்த்ரபுஷ்கரிணியின் கரையில் ஸ்ரீரங்கவிமாநம் உள்ளதைக் குறித்து உனக்கு நான் முன்பே விரிவாகக் கூறியுள்ளேன். அப்படிப்பட்ட ஸ்ரீரங்கவிமாநம் அசுரர்கள், தேவர்கள், மனிதர்கள் என்று யார் தன்னை ப்ரதக்ஷிணம் செய்தாலும் மிகவும் உயர்ந்த கதியை அளிப்பதாக உள்ளது. ஸ்ரீரங்கவிமாநத்தை ப்ரதக்ஷிணம் செய்ய எண்ணுபவனுக்கு முன்பாக தேவதைகள் அனைவரும் வந்து நிற்பார்கள்.

சதுர்விம்சதி ஸங்க்யாத்து ரங்கதாம ப்ரக்ஷிணாத்
காயத்ரீ கோடி ஜபதோ யத் பலம் தத் அவாப்நுயாத்
ஏகம்வாபி த்விதீயம் வா ரங்கதாம ப்ரதக்ஷிணம்
க்ருத்வா து ஸர்வலோகாநாம் ப்ரதக்ஷிண பலம் லபேத்
அநேந தீர்கமாயுச்ச ராஜ்யலக்ஷ்மீரரோகதா
ஸத்புத்ர பௌத்ர லாபச்ச ஜாயதே நாத்ர ஸம்சய:
ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே
ப்ரக்ஷிணாத் பரோதர்மோ நாஸ்தி ஸ்ரீரங்கசாயிந:
ய: ச்ரத்தாபக்தி ஸம்யுக்தோ ரங்கதாம ப்ரதக்ஷிணம்
கரோதி ஸததம் தந்யஸ்ஸது நாராயணாத்மக:
நாத்ரகாலம் விபாகோப்தி ரங்கதாம ப்ரதக்ஷிணே
ஏதஸ்ய புத்ரமாஹாத்ம்யம் ந சக்ய வர்ணிதும் மயா
யமச்ச கிங்கராந் ப்ரஹ ரங்கக்ஷேத்ர ப்ரபாவவித்

**பொருள்** – இருபத்துநான்குதடவை ஸ்ரீரங்கவிமானத்தை ப்ரதக்ஷிணம் செய்பவன், காயத்ரி மந்த்ரத்தைக் கோடிதடவை ஜபம் செய்த பலனை அடைகிறான். ஒன்று அல்லது இரண்டுதடவை ஸ்ரீரங்கவிமானத்தை ப்ரதக்ஷிணம் செய்பவன், அனைத்து லோகங்களையும் ப்ரதக்ஷிணம் செய்த பலனை அடைகிறான். ஸ்ரீரங்கவிமானத்தை ப்ரதக்ஷிணம் செய்வதன் மூலம் ஆரோக்யத்துடன் கூடிய ஆயுள், ராஜபதவிகள், நோய் இன்மை, நல்ல புத்திரர்கள், நல்ல பேரன்கள் ஆகியவை கிட்டும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை என்பதை என்னுடைய கையை உயர்த்தி, “ஸத்யம், ஸத்யம், ஸத்யம்” என்று கூறுகிறேன். ஸ்ரீரங்கவிமானத்தை வலம் வருவதைக் காட்டிலும் உயர்ந்த தர்மம்

வேறு ஏதும் இல்லை. ஸ்ரீரங்கவிமானத்தைப் பக்தி ச்ரத்தையுடன் ப்ரதக்ஷிணம் செய்பவன் நாராயணனாகவே விளங்குவான். ஸ்ரீரங்கவிமானத்தை வலம் வருவதற்கு எவ்விதமான கால நேர கட்டுப்பாடும் இல்லை. இந்த ப்ரதக்ஷிணத்தின் மூலம் கிட்டவல்ல புத்திரர்களுடைய மேன்மை குறித்து எனக்கு வர்ணிக்க இயலாது. யமன் தன்னுடைய கிங்கரர்களுக்கு இந்த ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின் மேன்மை உரைத்தபடி உள்ளான்.

யமன் உரைப்பது:

ச்ருணுத்வம் கிங்கராஸ்ஸர்வே ரஹஸ்ய யமபாஷிதம்
யஸ்ய ஸ்ரீரங்கஸதநம் ப்ரதக்ஷிணமதிர்பவேத்
அபி பதகிநஸ்தஸ்ய ஸமீபம் நோபகச்சத
யஸ்து ஸ்ரீரங்கஸதநம் ப்ரதக்ஷிணம் பரோநர:
தத் பந்தூநா ச ஸர்வேஷாம் குருத்வம் ப்ரணிதம் ஸதா

**பொருள்** – ஸ்ரீரங்கவிமானத்தை ப்ரதக்ஷிணம் செய்வதன் மேன்மை குறித்து அறிந்த யமதர்மன் தன்னுடைய கிங்கரர்களிடம் அன்றாடம், "ஸ்ரீரங்கவிமானத்தை யார் ஒருவன் ப்ரதக்ஷிணம் செய்கிறானோ அவனுடைய உற்றார் உறவினர்களிடம் கூட நீங்கள் பணிவுடன் வணங்கி நடக்கவேண்டும்", என்கிறார்.

ப்ரஹ்மா உரைப்பது:

இதி ஸூக்ஷ்மார்த வித்தேப்யோ யமோ வததி நித்யச:
அஹம் தேவாச்ச ருஷயஸ்தாத்யாச்ச பிதரஸ்ததா
வஸவச்ச ததாசாந்யே நித்யம் த்வாதச ஸங்க்யயா
ப்ரதக்ஷிணம் ரங்கதாம்ந: குர்மஹே ச்ரத்தயாயுதா:
ப்ரஹ்மஹா வா ப்ரூணஹா வா ஸ்த்ரீஹத்யாநிரதோபி வா
ப்ரதக்ஷிணாதம் ரங்கதாம்ந: ஸத்ய சுத்திம் அவாப்நுயாத்
ஏகாந்தஸமயே தேவம் பப்ரச்ச ஜகதீச்வரம்
தேவதேவ பவாம்போதௌ மக்நாநாம் க்ஷீணதேஜஸாம்
கதம் வா பார ஸம்ப்ராப்தி: கோதர்மோ மோக்ஷதோ பவேத்
யோநுஷ்டாநே லகுதர: பலப்ராப்து மஹாகுரு:
தாத்ருசம் தர்மமாசக்ஷ்வ மம கௌதூஹலம் மஹத்
இதி விஜ்ஞாபிதோ தேவ்யா ப்ரத்யுவாச ஜகத்பதி:

**பொருள்** – இப்படியாக யமதர்மன் இதன் ஸூக்ஷ்மமான இரகசியத்தை உரைத்தான். நான்முகனாகிய நான், தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், வஸுக்கள் போன்ற பலரும் ஒவ்வொரு நாளும் இந்த ஸ்ரீரங்கவிமானத்தை பன்னிரண்டு தடவைகள் வலம்

வருகிறோம். மிகவும் பக்தியுடன் இந்த ஸ்ரீரங்கவிமானத்தை ப்ரதக்ஷிணம் செய்தால் அந்தணனைக் கொன்றதால் உண்டாகும் தோஷம், பசு மற்றும் பெண்ணைக் கொன்றதால் உண்டாகும் பாவம் ஆகியவை விலகும். ஒருநாள் ஸ்ரீரங்கநாச்சியார் ஸ்ரீரங்கநாதனுடன் தனித்திருந்த நேரத்தில் அவனிடம், "இந்த ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள் கரையேற என்ன வழி உள்ளது? கடைப்பிடிப்பதில் எளியதாகவும், பெரிய பலன் அளிக்கவல்லதும் ஆகிய தர்மம் எது? இப்படிப்பட்ட உயர்ந்த தர்மத்தை எனக்கு உரைப்பீராக", என்றாள். இதற்கு அனைத்து லோகங்களுக்கும் நாதனான ஸ்ரீரங்கநாதன் விடை அளிக்கத் தொடங்கினான்.

ஸ்ரீபகவான் (ஸ்ரீரங்கநாதன்) உரைப்பது:

ச்ருணு லக்ஷ்மீ ப்ரவக்ஷ்யாமி ரஹஸ்யம் தர்மமுத்தமம்
யேந ஸம்ஸாரமக்நோபி மமலோகே ஸமேததி
மம ஸ்ரீரங்கநிலயோ வர்ததே கலு ஸுந்தரி
தத்தர்சந நமஸ்கார: ப்ரதக்ஷிண விதிஸ்ததா
தர்மைரேதேஸ் த்ரிபிர்மர்த்யோ: மம ஸாயுஜ்யமாப்நுயாத்
ஏதேஷு ரங்ககேஹஸ்ய ப்ரதக்ஷிண விதிர்மஹாந்
ஏவம் ப்ரவர்திதா தர்மா: பூர்வஸ்மிந் ஜந்மஸப்தகே
மயி யஸ்ய ஸ்திராபக்தி: தஸ்யை தல்லப்யதே சுபே
பக்தி ச்ரத்தா ஸமேதஸ்ய ரங்கதாம ப்ரதக்ஷிணம்
பதே பதாந்தரம் கத்வா கரௌ சலநவர்ஜிதௌ
வாஸா ஸ்தோத்ரம் வா ஹ்ருதா த்யாநம் சதுரங்க ப்ரதக்ஷிணம்
ஆஸந்ந ப்ரஸவாநாரீ பய: பூர்ணகடம்யதா
உத்வஹந்தீ சநைர்யாதி ததா குர்யாத் ப்ரதக்ஷிணம்
மாமகஸ்ய விமாநஸ்ய ப்ரதக்ஷிணபரோ நர:
நித்யம் அஷ்டோத்தர சதம் சதுர்விம்சதிமேவ வா
ப்ரதக்ஷிணம் ய: குருதே காரயத்யபி வா நர:
ஸ புமாந் ஸாகராந்தாயா: ஸர்வபூமே: பதிர்பவேத்
ஸைத்தே ப்ரதக்ஷிணம் யைஸ்து குர்யாத்காந்தா ஸமாவ்ருத:
இந்த்ரஸ்யார்தாஸநாரூடோ பவத்யாநந்த நிர்பர:
திவ்யாந் புக்த்வா ப்ராபோகாந் பச்சாத் தேவர்ஷி பூஜித:
ப்ரஹ்மலோகம் ஸமாஸாத்ய பரமாநந்த நிர்பர:
ஸ்வயம்வக்தே ததா குர்வந் கருடாதிபிர் அர்சித:
ஸர்வபந்த விநிர்முக்தோ மம லோகே மஹீயதே
ஆதி மே அஸ்மிந் ஸ்வயம்வக்தே ஸ்ரீரங்கநிலய ப்ரியே


Email:sridharan_book@yahoo.co.in

**பொருள்** – இப்படியாகக் கேட்ட ஸ்ரீரங்கநாச்சியாரிடம் ஸ்ரீரங்கநாதன் உரைக்கத் தொடங்கினான் – மஹாலக்ஷ்மீ! மிகவும் இரகசியமான உயர்ந்த தர்மத்தை நான் உனக்குக் கூறுகிறேன், கேட்பாயாக. ஸம்ஸார பந்தத்தை அழிக்கவல்லதும், என்னுடைய பரமபதத்தை அளிக்கவல்லதும் எதுவென்றால் என்னுடைய ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் இப்போதும் அழகாக உள்ள ஸ்ரீரங்கவிமானத்தைத் தரிசிப்பது, அதனை நமஸ்காரம் செய்வது மற்றும் அதனை ப்ரதக்ஷிணம் செய்வது என்பதான மூன்று செயல்களே ஆகும். இந்த மூன்று செயல்களைச் செய்யும் ஒருவன் என்னுடைய ஸாயுஜ்யத்தை (ஒத்த நிலை) அடைவான். என்னிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவன் மற்றும் ஏழு பிறவிகளில் தர்மம் செய்தவன் ஆகியோருக்கு மட்டுமே அத்தகைய மங்களகரமான செயல்கள் ஏற்படும். என்னிடம் பக்தியும் ச்ரத்தையும் கொண்டு, அடி மேல் அடி வைத்து, கைகள் அசையாமல் குவித்து, வாயால் துதித்து, மனதால் என்னை மட்டுமே தியானிப்பதான இந்தச் சதுரங்க ப்ரதக்ஷிணத்தைச் (நான்குவிதமான அங்கங்கள் – அடிமேல் அடி வைத்து நடப்பது, கைகளைக் குவித்து நடப்பது, வாயால் ஸ்ரீரங்கநாதனைத் துதிப்பது, மனதால் ஸ்ரீரங்கநாதனை தியானிப்பது) செய்பவன் மீண்டும் ஒரு பெண்ணின் கருப்பையில் புகவேண்டுமோ என்பதான பிறவி பயம் நீங்கப் பெற்று, மேலே எழும்பி, பரமபதம் அடைகிறான். யார் ஒருவன் ஒவ்வொரு நாளும் நூற்றெட்டு அல்லது இருபத்துநான்கு தடவை ப்ரதக்ஷிணம் செய்கிறானோ அவன் அனைத்து லோகங்களுக்கும் அதிபதி ஆவான். அப்படிப்பட்டவனை இந்த்ரன் உள்ளிட்ட தேவர்கள் எல்லையற்ற ஆனந்தத்துடன் கொண்டாடி மகிழ்வர்; அவனைத் தேவரிஷிகளும் போற்றுவார்கள்; அவன் எல்லையற்ற பரமானந்தம் அடைகிறான். இப்படியாகத் தானாகவே வெளிப்பட்ட அந்த ஸ்ரீரங்கவிமானத்தைக் கருடன் எப்போதும் அர்ச்சனை செய்தபடி உள்ளான். அனைத்துவிதமான பந்தங்களிலிருந்தும் விடுவித்து, என்னுடைய ஸத்யலோகத்தை அளிக்கவல்லதும், தொடக்கத்தில் நான் விரும்பி வெளிப்பட்டதும், எனக்கு மிகவும் ப்ரியமானதும் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் உள்ள அந்த ஸ்ரீரங்கவிமானம் ஆகும்.

நித்யமஷ்டோத்தரசதம் சதுர்விம்சதிமேவ வா
ப்ரதக்ஷிணம் ய: குருதே காரயத்யபி வா நர:
ஸ புமாந் கருடாரூடோ மம சிஹ்நைரலங்க்ருத:
விஷ்வக்ஸேந: ப்ரப்ருதிபி: பூஜ்யதே நித்யஸூரிபி:
மம லோகம் ஸமாஸாத்ய பரமாநந்த நிர்பர:

சேஷதல்பே மயா ஸார்தம் வர்ததே சாருஹாஸிநீ
ஏகம் வாபி த்விதீயம் வா மம தாம ப்ரதக்ஷிணம்
க்ருத்வா து ஸர்வலோகாநாம் ப்ரதக்ஷிண பலம் லபேத்
யஸ்து த்வாதச ஸங்க்யம் து ரங்கதாம ப்ரதக்ஷிணம்
குருதே த்வாதசார்ணஸ்ய மநோர் லக்ஷ ஜபாத் பலம்
யல்லப்யதே ததாப்நோதி ததா காரயதா நர:
சதுர்விம்சதி ஸக்யாகாதம் ரங்கதாம ப்ரதக்ஷிணாத்
காயத்ரீ கோடி ஜபதோ யத் பலம் தத் ஸமாப்நுயாத்
அஷ்டோத்தரசதம் யஸ்து குருதே காரயத்யபி
மதம்ச ஏவாஸௌ மர்த்யஸ் ஸுபூஜ்யோ ப்ரஹ்மவாதிபி:
ஆத்மமர்யாதயாதீமாந் ஏகேநைவ த்விஜந்மநா
நித்யமஷ்டோத்தரசதம் சதுர்விம்சதிமேவ வா
ப்ரதக்ஷிணம் ய: குருதே காரயத்யபி வா நர:
விபூதி யுக்மம் தத்வாபி தஸ்மை த்ருப்திர் ந மே பவேத்
இதி லக்ஷ்ம்யா ஜகந்நாதோ ரஹஸ்யம் தர்மமாதிசத்
தஸ்மைச் ச்ரேயோர்திபி: புத்ரம் கார்யம் ரங்கப்ரதக்ஷிணம்

**பொருள்** – யார் ஒருவன் ஸ்ரீரங்கவிமானத்தை அன்றாடம் நூற்றெட்டு அல்லது இருபத்துநான்கு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்கிறானோ, அவன் என்னுடைய சங்கு, சக்கரம் போன்ற சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டும், கருட வாகனத்தில் அமர வைக்கப்பட்டும், விஷ்வக்சேநர் உள்ளிட்டவர்களால் வரவேற்கப்பட்டும் என்னுடைய ஸத்யலோகம் அடைவான்; அங்கு வரும் அவன் என்னுடன் ஆதிசேஷனில் அமர்ந்தபடி பரமானந்தமாக இருப்பான். யார் ஒருவன் ஸ்ரீரங்கவிமானத்தை அன்றாடம் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்கிறானோ, அவன் அனைத்து லோகங்களையும் ப்ரதக்ஷிணம் செய்த பலனைப் பெறுகிறான். என்னுடைய ஸ்ரீரங்கவிமானத்தைப் பன்னிரண்டு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்பவனும், அவ்வாறு அவனைச் செய்யத் தூண்டியவனும் த்வாதச அக்ஷர மந்த்ரமான “ஓம் நமோ பகவதே வாஸுதேவாய” என்பதை லக்ஷம் தடவை ஜபித்த பலனை அடைகிறான். என்னுடைய ஸ்ரீரங்கவிமானத்தை இருபத்துநான்கு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்பவன், கோடி தடவைகள் காயத்ரி மந்திரத்தை ஜபித்த பலனை அடைகிறான். என்னுடைய ஸ்ரீரங்கவிமானத்தை நூற்றெட்டு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்பவனும், அவ்வாறு

அவனைச் செய்யத் தூண்டியவனும் என்னுடைய அம்சத்தைப் பெறுவார்கள்; அவர்கள் ப்ரஹ்மவித்துக்களால் பூஜிக்கப்படுவார்கள். என்னுடைய ஸ்ரீரங்கவிமானத்தை அன்றாடம் நூற்றெட்டு அல்லது இருபத்துநான்கு தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்பவனுக்கும், அவ்வாறு அவனைச் செய்யத் தூண்டியவனுக்கும் என்னுடைய நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் அளித்தால் கூட எனக்கு மனநிறைவு உண்டவதில்லை.

ஸ்ரீமத்ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்கவிமான ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம் ஸம்பூர்ணம்

அழகிய மணவாளன் திருவடிகளே சரணம்
தஞ்சமடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே தஞ்சம்


Email:sridharan_book@yahoo.co.in